**MCOP.No.283/2017**

Date: 12.08.2025.

ம.சா.1 ஜெயக்குமார், த/பெ.குமாரபெருமாள் என்ற போஸ்

**<u>சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜரானார். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 4ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயங்களுக்கு இழப்பீடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் இரு சக்கர வாகனம் ஓட்டிச்சென்றேன் என்றால் சரிதான். அப்போது என்மீது ஒரு மகேந்திரா வேன் மோதியது. அதன் பின்பு நான் மருத்துவ சிகிச்சை பெற்று இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கில் என்மீது மோதிய வாகனம் 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டு 2ம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்பட்டதாக சொல்லியிருந்தேன். ம.சா.ஆ.3 ல் அந்த வாகனம் 2ம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த காப்பீடு 23.10.2016 ல் இருந்து 23.10.2017 ல் முடிவடைவதாக உள்ளது என்றால் சரிதான். அதற்கு ஆதரவாக ம.சா.ஆ.4 காப்பீட்டு சான்றிதழை தாக்கல் செய்துள்ளேன். என்மீது மோதிய வாகனம் 4ம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதற்கான ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்திற்கு முன்பு 08.10.2016 முதல் 07.10.2017 வரை 4ம் எதிர்மனுதாரரிடம் மேற்படி வாகனம் காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் எதிர்மனுதாரர் 4ம் எதிர்மனுதாரரை அணுகி தனது வாகனத்தின் காப்பீட்டை ரத்து செய்யுமாறு கோரியதன் பேரில் 4ம் எதிர்மனுதாரர் மேற்படி காப்பீட்டை ரத்து செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 4ம் எதிர்மனுதாரருக்கு விபத்து சமயத்தில்

1ம் எதிர்மனுதாரர் வாகனத்துடன் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் விபத்து சமயத்தில் மேற்படி வாகனம் 2ம் எதிர்மனுதாரரிடம்தான் காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்றும் சொன்னால் எனக்கு விபத்தின்போது எந்த நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்ததோ அந்த நிறுவனம்தான் கொடுக்க வேண்டும். விபத்து சமயத்தில் 4ம் எதிர்மனுதாரரிடம் 1ம் எதிர்மனுதாரரின் வாகனம் காப்பீடு செய்யப்படாததால் 4ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் விபத்தின்போது எந்த நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்ததோ அந்த நிறுவனம்தான் கொடுக்க வேண்டும். 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் தங்கள் கடமையிலிருந்து தப்பிக்கும் எண்ணத்தில் 4ம் எதிர்மனுதாரரை தேவையின்றி வழக்கில் சேர்த்துள்ளார் என்றால் சரியல்ல. விபத்தானது தூத்துக்குடி-மதுரை பைபாஸ் ரோட்டில் ரமேஷ் பிளவர் நிறுவனம் அருகில் நடைபெற்றது. வேன் முன்னால் சென்றுகொண்டிருந்தது என்றும் நான் பின்னால் சென்று கொண்டிருந்தேன் என்றும் சொன்னால் சரிதான். நான்தான் அந்த வேனை முந்தி செல்ல முயன்றபோது நிலைதடுமாறி கீழே விழுந்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால்ர சரியல்ல. நான் போதிய இடைவெளி விட்டு வேனை பின்தொடர்ந்து போக்குவரத்து விதிகளை கடைபிடித்து சென்றிருந்தால் விபத்து ஏற்பட்டிருக்காது என்று சொன்னால் சரியல்ல. விபத்து என்னுடைய அஜாக்கிரதையாலும் கவனக்குறைவாலும் ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து நடந்தவுடன் நான் தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் முதலுதவி பெற்று பின்பு திரவியம் மருத்துவமனையில் மேல்சிகிச்சை பெற்றேன். அங்கு 28.07.2017 முதல் 03.08.2017 வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். அங்கு எனக்கு

அறுவை சிகிச்சை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. அங்கு 5 நாட்கள் நான் சிகிச்சையில் இருந்தேன் என்று சொன்னால் சரிதான். அதன் பின்பு 06.11.2017 அன்று அதே மருத்துவமனையில் சிகிச்சைக்கு சென்றுள்ளேன் என்றால் சரிதான். அன்று ரூ.8000/- சிகிச்சைக்கு செலவழித்ததாக சொல்வது அதிகப்படியானது என்று சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ.9 ல் Scan எடுத்த வகையில் ரூ.8500/- செலவழித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அதிகப்படியாக இழப்பீடு பெற வேண்டும் என்ற எண்ணத்தில் ம.சா.ஆ.9 ல் தொகை மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் குணமாகிவிட்டது என்றும் அதனால் எனக்கு பகுதி நிரந்தர ஊனம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனது வேலை மற்றும் வருமான இழப்பிற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு அதிகப்படியானது என்றும் 4 ம் எதிர்மனுதாரர் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:-</u>** இல்லை

ஒம்/-R.V.ராஜகுமார்,
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**தூத்துக்குடி.**